(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 117.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 ஓகத்து 25, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0589/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கம் கொள்கை அளவில் தனியார் மயமாக்கலுக்கு எதிராக உள்ளதா என்பதையும்,

(ii) நாட்டின் கண் கூடற்ற சொத்துக்களுக்கு பெறுமதியுண்டா என்பதையும்,

(iii) நாட்டின் கண்கூடற்ற சொத்துக்கள் எவை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி, தொலைக்காட்சி, செய்மதி ஒளிபரப்புச் செயற்படுத்துனர்கள் கையடக்கத் தொலைபேசிச் செயற்படுத்துனர்கள், அகலப்பட்டை செயற்படுத்துனர்கள், மற்றும் வாசலில் இருந்து வீட்டிற்கு (DTH) சேவை வழங்குனர்களெல்லாம் உரிமம் வழங்கும் அதிகார சபையின் பெயர் என்ன என்பதையும்,

(ii) கடந்த ஆறு வருடங்களில் மேற்படி வகைப்பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட எல்லா உரிமங்களும் யாவை என்பதையும்,

(iii) அவ் உரிமங்களை வழங்குவதால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி உரிமங்கள் விலை மனுகோரல் அடிப்படையில் வழங்கப்படலாம் என்பதையும்,

(ii) மேற்படி உரிமங்களை வழங்கும் தற்போதைய முறைமையானது ஒரு இரகசியமான தனியார் மயமாக்கல் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1086/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தக தபாலில் ஏற்பட்டுள்ள மோசடிகள் சம்பந்தமாக ஆரம்ப விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சின் செயலாளரால் கே.சீ.ஜயரத்ன மற்றும் யூ.எல். ஆரியபால ஆகியோரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி குழுவின் ஆரம்ப விசாரணை அறிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு பிரதியொன்றுடன் 2008.06.26 ஆம் திகதியன்று தபாலதிபர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அவ்வறிக்கையின் படி தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31 வது வாசகத்தில் குறிப்பிட்டுள்ள பிரதி தபாலதிபர் நாயகம் திரு. கே.ஏ. சேனாதீர முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக விதந்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர்அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தருக்கெதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் அதன் திகதி யாதென்பதையும்;

(ii) ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) முறைகேட்டில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள திரு. சேனாதீரவை ஊழியர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விதப்புரைகள் செயற்படுத்தப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

1101/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மற்றும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி ஆகிய மாதங்களில் ஏற்பட்ட மழையுடள்கூடிய காலநிலையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, மக்கள் தொகை மற்றும் சேதத்திற்குள்ளான வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இந்த அனர்த்த நிலைமைக்கு முகம் கொடுப்பதற்காக ஒவ்வொரு மாவட்டம் சார்பாகவும் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனர்த்த நிலைமையினால் அழிவடைந்த சொத்துக்கள் சார்பாக நிதியுதவி வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் ஒரு குடும்பத்திற்காக வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1247/ '11

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தபால் சேவைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1449/ '11

5.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இந்நாட்டிளுள்ள பெரும் எண்ணிக்கையிலான தபால் அலுவலகங்களில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சியடைந்த உத்தியோகத்தர்களுக்கு பாரியதொரு பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அனைத்து தபால் அலுவலகங்களிளும் நிலவும் அவ்வாறான வெற்றிடங்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் அவ்வாறான வெற்றிடங்களை நிரப்பும் முகமாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாவென்பதை

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

0595/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1995 — 2000 காலப்பகுதியில் வருடாந்த அடிப்படையிலான,

(i) நாட்டின் மொத்த வேலைப்படை என்ன என்பதையும்,

(ii) தனியார் துறை மற்றும் அரசதுறை வேலைப்படை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iii) அரச துறையில் முப்படைகள், பொலிஸ்துணைச் சேவை ஆகியவற்றின் மொத்தத் தொழில்படை மற்றும் அல்லாத ஏனைய அரச சேவையினரின் மொத்த எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iv) பொதுத் துறையின் கீழ் வரும் மேலே குறிப்பிடப்பட்ட அனைவரும் ஓய்வூதியத்துக்குரித்துடையவர்களா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 15 ஆண்டுகளில், அரசதுறையில் ஏதேனும் உறுதிப்படுத்தப்படாத, தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவர்களின் பெயர்கள், நியமனங்கள் என்ன வென்பதையும்,

(iii) அந்நியமனங்கள் அரசாங்கத்தின் சம்பளச் செலவினத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை வருட வாரியாகவும்,

(iv) அவை எப்போது உறுதி செய்யப்படும் என்பதையும்,

(v) அவை எதிர்காலத்தில் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், இந் நோக்கத்திற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் எப்போது மேற்கொண்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1102/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— நீர்ப்பாசன , நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்றகு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டு சனவரி மாதம் பெய்த மழை காரணமாக அழிவடைந்த குளங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அழிவடைந்த குளங்களை புனரமைப்பதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அழிவடைந்த குளங்களில் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) புனரமைக்கப்படாத குளங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) அந்தக் குளங்கள் புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1107/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியாசலையின் சத்திரசிகிச்சை கூடங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் பிற பௌதீக வளங்களின் பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றதா என்பதையும்;

(ii) பௌதீக வளங்களின் தட்டுப்பாடு காரணமாக வைத்தியர்கள் வெறுமனே காலத்தைக் கழிக்க வேண்டி எற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந் நிலைமையைத் தவிர்த்து சிறுவர் சுகாதாரத்தைப் பாதுகாக்க அவசியமான பௌதீக வளங்களைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இந் நிலைமைக்குத் தீர்வாக அந்த வைத்தியசாலையில் புதிய கட்டிடங்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவசியமான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி கட்டிட நிர்மாணிப்பினை மேற்கொள்வதற்கு உரிய காலவரையறை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1248/ '11

9\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கைத்தொழில், வாணிப அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1603/ '11

10\.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய வருடாந்த மொத்த மீன் உற்பத்தி யாதென்பதையும்;

(ii) அதனை அதிகரிப்பதற்காக இவ்வாண்டினுள் செயற்படுத்தியுள்ள மற்றும் செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1062/ '11

11\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டையிலுள்ள மஹிந்த ராஜபக்ச துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் எப்போது பூர்த்தி செய்யப்பட்டன என்பதையுறம் அதன் வர்த்தக நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் திறக்கப்பட்ட தினத்திலிருந்து அதில் தரித்துள்ள கப்பல்கள், படகுகள் மற்றும் கலங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையினையும்;

(iii) அத்துறைமுகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையினையும்;

(iv) மாதாந்தச் சம்பளத்திற்காக ஒதுக்கப்படும் தொகையினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் இன்றுள்ளவாறான ஐந்தொகையினை அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1104/ '11

12\.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படும் எல் .பீ. எரிவாயுவின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த வருடம் சனவரி மாதம் தொடக்கம் இதுவரை மாதாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட எல். பீ. எரிவாயுவின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அந்த கால எல்லைக்குள் மாதாந்தம் விற்பனை செய்யப்பட்ட எல். பீ. எரிவாயுவின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) ஒரு தொன் எல். பீ. எரிவாயுவின் விற்பனை விலை ரூபாக்களில் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த வருடம் திசெம்பர் மாதம் இறுதியிலும் இவ்வருடம் சனவரி மாதம் முற்பகுதியிலும் உற்பத்திசெய்யப்பட்ட எல். பீ. எரிவாயு பயன்படுத்தப்படாமல் எரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதன் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) எல். பீ. எரிவாயு அவ்வாறு எரிக்கப்படுவதற்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1108/ '11

13\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் அரச பாடசாலைகளில் 2000 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி காலகட்டத்தில் ஒரு மாணவருக்கு அல்லது மாணவிக்கு வருடாந்தம் கிடைத்துள்ள புலமைப்பரிசில் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சில பாடசாலைகளில் புலமைப் பரிசில் பயனாளிகள் சிலருக்கு ஆறு மாதம் முதல் இரண்டு வருடகாலம் வரை புலமைப் பரிசில் உதவிப் பணம் கிடைக்கவில்லையென்பதையும்,

(ii) தற்போது வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் உதவித் தொகை தற்போதைய வாழ்கைத் தரத்திற்கேற்ப போதியாக இல்லையென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், இற்றைவரை செலுத்தப்படாதுள்ள புலமைப்பரிசில் உதவித் தொகையை துரிதமாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) தற்போது செலுத்தப்படுகின்ற புலமைப்பரிசில் உதவித் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) இவ்வாறு அதிகரிக்கப்படுமாயின், அத் தொகை மற்றும் இவ்வதிகரிப்பு எத்திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1249/ '11

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1604/ '11

15.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலத்திரனியல் கழிவுப்பொருட்களை சேகரிக்கும் கருத்திட்டத்தின் கீழ் இதுவரையில் சேகரிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அவ்வாறு சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், சேகரிக்கப்பட்ட இலத்திரனியல் கழிவுப்பொருட்களில், தற்போது மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் கழிவுப் பொருட்களின் அளவு யாதென்பதையும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ லெஸ்லி குணவர்தன

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜயசேன ராஜகருனா

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜே. டீ. வீரசேகர

4.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அகுஸ்தீனு பொன்சேகா

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.